கொரோனா வைரசு நோய் (COVID-19)

# தனிமைப்படுதல்: பராமரிப்பாளர், வீட்டார், நெருங்கிய தொடர்பாளர் ஆகியோருக்கான வழிகாட்டி

**நீர் வைரசுள்ள ஒருவரைப் பராமரித்தால் அல்லது அவருடன் வாழ்ந்தால், நீர் ஒரு 'நெருங்கிய தொடர்பு' எனக் கருதப்படுகிறீர்.**

**உமது சுகாதாரத்தைக் கண்காணிக்கும் முறை, நீர் நோயுற்றதாக உணரத் தொடங்கினால் யாது செய்ய வேண்டும், அவர்களை எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்பவற்றைப் பற்றி உள்ளூர்ப் பொதுச் சுகாதார அலகு உமக்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்கும். நீர் COVID-19 உள்ள ஒருவரின் நெருங்கிய தொடர்பு என்பதைச் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர்களிடம் கூறுவதை உறுதி கொள்க.**

## உமது கைகளை அடிக்கடி கழுவுக

- கிருமி தொற்றிய ஒருவருடனான ஒவ்வொரு தொடர்பின் பின்னரும் சவர்க்காரமும் நீரும் கொண்டு உமது கைகளைக் கழுவுக.
- ஒரு மாற்றீடாக மதுசார அடிப்படையிலான கைத் துப்புரவாக்கியைப் பயன்படுத்துக.




## முகமூடிகளையும் கையுறைகளையும் கண் பாதுகாப்பையும் அணிக

- உமக்கு அவரது உமிழ் நீருடன் அல்லது (குருதி, வியர்வை, உமிழ் நீர், சத்தி, சிறுநீர், மலம் போன்ற) ஏனைய உடற் பாயங்களுடன் தொடர்பு ஏற்படும் போது ஒரு முகமூடி, கையுறைகள், கண் பாதுகாப்பு என்பவற்றை அணிக.
- கண் பாதுகாப்பின் உதாரணங்களில் பாதுகாப்புக் கண்ணாடிகள், கண்ணணிகள், முகக் காப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன.



## பயன்படுத்திய பின்னர் கையுறைகளையும் முகமூடியையும் அப்புறப்படுத்துக

- நீர் பராமரிப்பு வழங்கியவுடன் கையுறைகளையும் முகமூடியையும் கழற்றி ஒரு பிளாத்திக்குப் பை உள்ளமைந்த குப்பைக் கூடையில் அப்புறப்படுத்துக.
- முதலில் கையுறைகளைக் கழற்றி உமது முகமூடியைக் கழற்ற முன்னர் சவர்க்காரமும் நீரும் கொண்டு உமது கைகளைத் துப்புரவாக்குக.
- பெரும்பாலான முகக் காப்புக்களும் கண்ணணிகளும் பயன்பாட்டுக்கிடையில் பீங்கான் கழுவும் அழுக்ககற்றியும் நீரும் அல்லது தொற்று நீக்கித் துடைப்புக் கொண்டு துப்புரவாக்கி மீண்டும் பயன்படுத்தப்படலாம்.
- உமது முகத்தைத் தொட அல்லது வேறெதையும் செய்ய முன்னர் சவர்க்காரமும் நீரும் கொண்டு உமது கைகளைத் துப்புரவாக்குக.



## உமது வீட்டுக்கு வருவோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துக

- நீர் சந்தித்தாக வேண்டிய விருந்தினரை மட்டும் கொண்டிருப்பதுடன் சந்திப்புக்களைக் குறுகியதாக வைத்திருக்க.
- முதியோரையும் (நீரிழிவு, நுரையீரற் பிரச்சினைகள், நிர்ப்பீடனக் குறைபாடு என்பன போன்ற) நாட்பட்ட மருத்துவ நிலைமைகளைக் கொண்டோரையும் கிருமி தொற்றியவரிலிருந்து தள்ளி வைத்திருக்க.



## வீட்டுப் பொருட்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்க



- ஆய்விலுள்ளவருடன் பீங்கான்களை, பருகும் குவளைகளை, உண்ணும் கருவிகளை, துவாய்களை, படுக்கை விரிப்பை அல்லது வேறு பொருட்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
- பயன்படுத்திய பின்னர், இப்பொருட்களைச் சவர்க்காரம் அல்லது அழுக்ககற்றியைக் கொண்டு இளஞ்சூட்டு நீரிற் கழுவ வேண்டும். விசேட சவர்க்காரம் எதுவும் தேவையில்லை.
- தட்டுக் கழுவிகளையும் சலவை இயந்திரங்களையும் பயன்படுத்தலாம்.
- சிகரெட்டுக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

## சுத்தமாக்குக



- வழமையான வீட்டுச் சுத்தமாக்கிகளைக் கொண்டு உமது வீட்டைச் சுத்தமாக்குக.
- மலசலகூடங்கள், கழுவுதொட்டி நீர்க்குழாப் பிடிகள், கதவுப்பிடிகள், படுக்கைப் பக்க மேசைகள் என்பன போன்ற வழமையாகத் தொடப்படும் பொருட்களை அன்றாடம் சுத்தமாக்குக.

## சலவைத் துணிகளை நன்றாகக் கழுவுக



- சலவைத் துணியை வேறாக்க வேண்டியதில்லை, ஆனால் அவற்றைக் கையாளும் போது நீர் கையுறைகளை அணிய வேண்டும்.
- உமது கையுறைகளை அகற்றியவுடன் சவர்க்காரமும் நீரும் கொண்டு உமது கைகளைத் துப்புரவாக்குக.

## கழிவுகளைத் தொடும் போது கவனமாக இருக்க



- கழிவுகள் யாவும் வழமையான குப்பைத் தொட்டிகளுக்குச் செல்லலாம்.
- குப்பைக் கூடைகளை வெறுமையாக்கும் போது, பயன்படுத்திய திசுக்களை உமது கைகளால் தொடாதிருக்கக் கவனமெடுக்க. குப்பைக் கூடையில் ஒரு பிளாத்திக்குப் பையை உள்ளமைத்தல் கழிவுகளை அப்புறப்படுத்துவதை இன்னும் எளிதாகவும் பாதுகாப்பாகவும் ஆக்குகிறது.
- குப்பைக் கூடையை வெறுமையாக்கிய பின்னர் சவர்க்காரமும் நீரும் அல்லது மதுசார அடிப்படையிலான கைத் துப்புரவாக்கியைக் கொண்டு உமது கைகளைத் துப்புரவாக்குக.

# வைரசைப் பற்றி அறிக

COVID-19 ஒரு புதிய வைரசாகும். அது கிருமி தொற்றிய ஒருவரிலிருந்து ஒரே வீட்டில் வசிப்போர் அல்லது பராமரிப்பு வழங்குவோர் போன்றோருடன் அவர் தொடர்பு கொள்ளும் போது சுவாசத் திவளைகளாக ஏனையோருக்குப் பரவுகிறது. நீர் COVID-19 ஐப் பற்றிய இற்றைப்படுத்திய தகவல்களை ஒன்ராறியோ சுகாதார அமைச்சின் வலைத்தளத்திலும் அணுகலாம்: ontario.ca/coronavirus.

மேலதிகத் தகவல்களுக்காக, தொடர்பு கொள்க: ______________________________________________

**இந்த ஆவணத்திலுள்ள தகவல்கள் 2020 யூலை 31 அன்றைக்கு நடப்பிலுள்ளவை**

**©ஒன்ராறியோவுக்கான இராணியின் அச்சகர், 2020**